தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 21-6-2017
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான பொதிகை தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நேற்று (21-6-2017) மூன்றாவது ஆண்டாக சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. தியானம் மற்றும் யோகா விழிப்புணர்வு பாடலுடன் விழா துவங்கியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தனது தலைமையுரையில் வேளாண் மாணவர்களுக்கு ஆராய்ச்சி மூலம் உற்பத்தியை பெருக்கி, பெருகி வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்கும் கடமை இருப்பதால் தங்களை உடலிலும், மனதிலும் உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் யோகக்கலையே அதற்கு பெரிதும் துணைபுரியும் என்றார். சற்றே மாறுபட்டாலும் குருகுல முறை இந்தியாவில் தொன்றுதொட்டு பயன்பாட்டில் உள்ளது யோகக்கலை மூலம் தெளிவாக அறியலாம் என்றார். யோகக்கலை அறிவியல் பூர்வமானது, இதனைக் கடைபிடிப்பதில் உடல் நலம், மன நலம் இரண்டும் ஒருங்கே பெற்று மாணவர்கள் வாழ்வில் முன்னேற முடியும் என்றும் கூறினார்.

கோவை மண்டலத்தின் உலக சமுதாய சேவை மையத்தின் தலைவர் திரு.ரா.பச்சையப்பன் மற்றும் செயலாளர் மற்றும் இணை இயக்குனர் (விரிவாக்கம்) திரு.பி.ஹரிதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் மாணவ, மாணவியர் அமர்ந்த நிலை மற்றும் நின்ற நிலையில் செய்யும் பயிற்சிகள், TNAU என்ற எழுத்துக்கள் வடிவில் நிற்றல் மற்றும் கண் பயிற்சி

போன்றவற்றை செய்தனர். பல்கலைக்கழக மாணவர்களின் யோகா செயல் விளக்கம் அனைவரையும் கவரும் வகையில் இருந்தது.

விழாவிற்கு பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சி.ஆர்.ஆனந்தகுமார், வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர்.ச.மகிமைராஜா மற்றும் பேராசிரியர்கள் பங்குக் கொண்டு சிறப்பித்தனர்.

உலக சமுதாய சேவை மைய யோகா ஒருங்கிணைப்பாளர் திருமதி. ரமா ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். செல்வன். டி.அருன் குமார் முதலாமாண்டு (வேளாண்மை) மாணவர் நன்றியுரை வழங்கினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர்.ச.மகிமைராஜா தலைமையில் முனைவர் கோ.ராகவன், உடற்கல்வி இயக்குனர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்